# ???????? ????????? ????????? ??????????
# ??????????????



தமிழர்களுக்கு எதிரான சிங்கள பேரினவாதத்தின் திட்டமிட்ட இன அழிப்புகளில் ஒன்றான கறுப்பு ஜூலையின் 37 ஆம் ஆண்டு நினைவு நாளான இன்று லண்டனில் தமிழர்கள் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

கொரோனா தொற்று நோய் குறித்த பிரித்தானிய அரசின் கட்டுப்பாட்டு விதிகளுக்கு உட்பட்டு லண்டனிலுள்ள இலங்கை தூதரகத்திற்கு முன்பாகவும் பிரித்தானிய பிரதமர் வாசஸ்தலத்திற்கு முன்பாகவும் புலிக்கொடிகளை ஏந்தியவாறு ஒன்றுதிரண்ட பெருமளவிலான தமிழர்கள் தொடரும் இன அழிப்புக்கு எதிரான கோசங்களை எழுப்பி ஆர்பாட்டத்தில் ஈடுபட்டனர்.




Sri Lanka
Killing Fields
40,000 Tamils
Massacred




இரத்தக்கறை மாறாத “கறுப்பு ஜுலை” 1983ஆம் ஆண்டு இனக்கலவரங்கள் இடம்பெற்று 37 ஆண்டுகளாகின்றன. ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் இதில் கொல்லப்பட்டனர். வகைதொகையின்றி படுகாயமடைந்தார்கள்.

தலைநகர் கொழும்பு மற்றும் நாட்டின் தென்பகுதி நகரங்களில் தமிழர்களின் கடைகள் அடித்து நொறுக்கப்பட்டு சூறையாடப்பட்டன. தமிழர்களுக்குச் சொந்தமான ஏராளமான வீடுகள், கட்டடங்களுக்கு தீ வைக்கப்பட்டன. வீதிகளில் வாகனங்கள் மறிக்கப்பட்டு தமிழர்கள் இருக்கின்றார்களா என்று தேடித் தேடி தமிழர்கள் மீது தாக்குதல்களை சிங்கள இன வெறியர்கள் திட்டமிட்டு நடத்தினார்கள்.


1 IN 10
REFUGEES IN 1983
WE REMEMBER
BLACK JULY
1983
Tamil Eelam is
the only solution
1 IN 10
REFUGEES IN 1983
NO ACCOUNTABILITY




sed to
Nation
ENOUGH



# ???? ?????? ?????????????? ????? ???? ???? ????????? ??????????!



இன்று வெளியாகியுள்ள நமது ஈழநாடு மின்னிதழ் பத்திரிகைக்கு நல்லை ஆதீன குரு முதல்வர் சோமசுந்தரம் பரமாச்சாரிய சுவாமிகள் ஆசிச்செய்தி வழங்கியள்ளார்

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்களின் ஒன்றான நமது ஈழநாடு நீண்ட இடைவெளியின் பின்னர் மீண்டும் பத்திரிகை வடிவில் மின்னிதழ் மூலமாக இன்று வெளியானது. இரத்தக்கறை மாறாத கறுப்பு ஜூலை சிறப்பு மலருடன் வெளியாகி தொடர்ந்து மாதம் ஒரு முறை வெளிவரவுள்ளது.

இந்நிலையிலேயே குறித்த நமது ஈழநாடு மின்னதழ் பத்திரிகைக்கு தனது ஆசி செய்தியை வழங்கியுள்ளார்.

அதில் அவர் இன்றைய கால சூழ்நிலையில் மக்களின் எதிர்பார்ப்புகளிற்கு ஏற்ப நமது ஈழநாடு பத்திரிகை மீண்டும் புதிய வடிவில் வெளிவருவதை மகிழ்ச்சியுடன் வரவேற்கின்றேன். தமிழ் மக்களின் அபிலாஷைகளுக்கு ஏற்ப அவர்களின் எதிர்பார்ப்புக்களை உலகறிய எடுத்துகூறும் வகையில் பத்திரிகை தர்மத்தோடு தொடர்ந்து வெளிவர வேண்டுமென இறையருளை வேண்டி ஆசி வழங்குகிறேன் என குறிப்பிட்டுள்ளார்.

---

# ‘???? ???????’ ?????????????? ???????? ????? ???????????? ?????????? ?????????!



இன்று வெளியாகியுள்ள நமது ஈழநாடு மின்னிதழ் பத்திரிகைக்கு மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இம்மானுவேல் பெனாண்டோ அவர்கள் ஆசிச்செய்தி வழங்கியள்ளார்

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்களின் ஒன்றான நமது ஈழநாடு நீண்ட இடைவெளியின் பின்னர் மீண்டும் பத்திரிகை வடிவில் மின்னிதழ் மூலமாக இன்று வெளியானது. இரத்தக்கறை மாறாத கறுப்பு ஜூலை சிறப்பு மலருடன் வெளியாகி தொடர்ந்து மாதம் ஒரு முறை வெளிவரவுள்ளது.

இந்நிலையிலேயே குறித்த நமது ஈழநாடு மின்னதழ் பத்திரிகைக்கு மன்னார் ஆயார் ஆசிச்செய்தி வழங்கியுள்ளார்.

அதில் தமிழ் மக்கள் மனம் நிறைந்த பத்திரிகையாக வலம் வந்த நமது ஈழநாடு எமது உரிமைக்குரலாக தமிழ் உணர்வின் வழிநின்று நீதியோடு குரல் எழுப்பி தனித்துவத்தோடு திகழ்ந்ததை யாரும் மறுக்கமுடியாது. எனினும் பத்திரிகைக்கு பல தடைகள் ஏற்பட்ட போதிலும்; தற்போது எவ்வித விட்டுக்கொடுப்பும் பின்வாங்குதலும் இல்லாமல் அதே போக்கோடும் வீச்சோடும் மாற்று வழியில் இணையப்பத்திரிகையாக நமது ஈழநாடு வெளிவருவதை எண்ணி மனமகிழ்கிறேன் என குறிப்பிட்டுள்ளார்.

Most Rev. Dr. Emmanuel Fernando
Bishop of Mannar
Bishop's House, Pattim, Mannar, Sri Lanka.
Tel : 023 2222503, 077 7281591, 023 2222710
Email : emmafdo@bell.net

**மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு கலாநிதி இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை அவர்களின் ஆசிச் செய்தி**

அன்றாட நிகழ்வுகளை நாம் அறியவும் அந்நிகழ்வுகளின் அடிப்படைகளைப் புரியவும் எமது அறிவை வளர்க்க வழி செய்கின்ற வகையில் பத்திரிக்கைகள் மனிதனை ஆளுகை செய்கின்றன. பழைய ஊடகமாகிய பத்திரிகைகள் புதிய நுட்பங்களைத் தன்னுள் புகுத்தி நாட்டில், உலகில் நடக்கும் நிகழ்வுகள் பற்றிய விளக்கங்களையும் விபரங்களையும் விமர்சனங்களையும் தந்து காலத்தைக் காட்டும் கண்ணாடியாகச் செயற்படுகின்றன. இந்த வகையில் தமிழ் மக்கள் மனம் நிறைந்த பத்திரிகையாக "நமது ஈழநாடு" வலம்வந்து எமது உரிமைக்குரலாக, தமிழ் உணர்வின் வழிநின்று நீதியோடு குரல் எழுப்பி தனித்துவத்தோடு திகழ்ந்ததை யாரும் மறுக்கமுடியாது.

இந்தப் பத்திரிகைத் பணியிலே "நமது ஈழநாடு" பத்திரிகை அதன் நிர்வாக இயக்குனர், பணியாளர்களை இழந்ததோடு, அச்சகம் அடைந்த பொருளிழப்புகள், அச்சுறுத்தல்கள், அடக்குமுறைகள் உலகம் அறிந்ததே. இதனால் வழமை போன்று பத்திரிகையை அச்சிட்டு வெளியிடமுடியாமற்போனாலும் எவ்வித விட்டுக்கொடுப்பும், பின்வாங்குதலும் இல்லாது உண்மையின், உரிமையின், நீதியின் குரலாய்த் தொடர்ந்து அதே போக்கோடும் வீச்சோடும் மாற்று வழியில் இணையப் பத்திரிகையாக "நமது ஈழநாடு" வெளிவருவதை எண்ணி மனமகிழ்கின்றேன். "நமது ஈழநாடு" பத்திரிகையை வாழ்த்தி இப்பத்திரிகைப் பணி பாரெங்கும் பல நூற்றாண்டாய் சிறக்க நல்லாசீரை உவந்து அளிக்கின்றேன்.

அன்புடன்

+ H Emmanuel Fernando

மேதகு ஆயர் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை
மன்னார் ஆயர்
மன்னார் மறைமாவட்டம்
*16-07-2020*

Most Rev. Dr. Emmanuel Fernando
Bishop of Mannar.